**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.808/2021

வா.சா. 2 சாதப்பன்

**குறுக்கு விசாரணை:-**

நான் சாட்சி சொல்லுவதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. நான் ஜெய் ஸ்ரீ ராம் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மேற்படி நிறுவனத்தில் என்ன பணி என்றால் புதிய பொருளை அறிமுகம்படுத்துவது, அதற்காக வாடிக்கையாளர்களுக்கு செயல் முறை விளக்கம் அளிப்பது மற்றும் நிறுவனத்தின் வரவு செலவுகளை கவனிப்பது ஆகியவை என்னுடைய பணியாகும். மேற்படி நிறுவனத்திற்கு உரிமையாளர் எனது மனைவி ஆவார். வாதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் நிறுவனமும் பங்குதாரர் நிறுவனம் என்றால் சரிதான். செந்தில்செல்வன் என்பவர் ஒரு பங்குதாரர் என்றும், அவரை தவிர அந்த நிறுவனத்தில் வேறு பங்குதாரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் இன்றைய தேதி வரை வழக்கின் அனைத்து விபரமும் தெரியும். மற்ற பங்குதாரர்களை இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் அந்த விபரம் தெரியாததால் சேர்க்கப்படவில்லை. பிரதிவாதி நிறுவனத்துடன் 8,9 வருடங்களாக வியாபாரம் செய்து வந்தேன். கடந்த 2018 ம் வருடம் ஜூலை மாதம் வரை பிரதிவாதியுடன் வியாபாரம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல, 2018 ம் வருடம் டிசம்பர் மாதம் வரை வியாபாரம் செய்து வந்தேன். தொழில் சம்பந்தமாக கணக்கு வழக்குகள் பராமரித்து வரும் விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதி நிறுவனம் கொடுத்த ஆர்டர் படிவம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஸ்மார்ட்போன் வந்த பிறகு அனைத்து ஆர்டர்களும் போன் மூலமாகவே செய்து வருவதால் தனியாக ஆர்டர் பாம் எடுப்பதில்லை. பிரதிவாதி நிறுவனம் ஸ்மார்ட்போன் மூலமாக ஆர்டர் கொடுத்தார்கள் என்பதை காட்டுவதற்கு அதன் பதிவு நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆர்டர் செய்த பொருட்களை டெலிவரி செய்தால் டெலிவரி மெமோவில் கையெழுத்து செய்த பிறகு தான் பொருளை கொடுப்பார்கள் என்றும்,

டெலிவரி சலான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் பொருளை நேரில் டெலிவரி செய்வதால் அதற்கு டெலிவரி சலானில் கையெழுத்து பெறுவது வழக்கமில்லை. நேரில் டெலிவரி செய்தாலும், டெலிவரி சலானில் கையெழுத்து பெற்றுக் கொண்டு டெலிவரி செய்வார்கள் என்றும், நேரில் டெலிவரி செய்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் தினசரி வரவு செலவு சம்பந்தமாக குறிப்பேடு பராமரித்து வருகிறோம். தினசரி குறிப்பேட்டின் பேரில் பேரேடு பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். தினசரி குறிப்பேடு மற்றும் பேரேட்டில் உள்ள கணக்கு விபரங்களை கொண்டு தான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்துடன் வரவு செலவு செய்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு தினசரி குறிப்பேடு, பேரேடு மற்றும் வருமான வரி கணக்கு விபரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள இன்வாய்ஸ் உண்மையானது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்திற்கும், எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் பிரதிவாதி நிறுவனம் எங்களுடன் வரவு செலவு செய்வதை 2018-ம் வருடம் ஜூலை மாதத்துடன் நிறுத்திக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்துடன் பிரச்சனை ஏற்பட்டதால் தான் பிரதிவாதி நிறுவனத்தை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் போலியாக இன்வாய்ஸ் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள எந்த வரவு செலவும் பிரதிவாதி நிறுவனத்துடன் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வாதி நிறுவனத்தின் மேலாளர் என்பதற்கு எனக்கு அங்கீகார கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், மேலாளர் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ள கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் சரியான கணக்கு விபரங்களை ஒப்படைக்காததால் பிரதிவாதியிடம் இருந்து எந்த தொகையும் பெறமுடியாது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :-</u>** இல்லை